மாறாக ஒரு வேளை கல்லூரிக் கல்விக்காக சில மாற்றங்கள் ஏற்படுகிற போது, மருத்துவக் கல்வியினுடைய நிலையை வைத்து பேராசியரிர் முதலானோர் குறித்து தகுதி உயர்வுகள் ஏற்படுமேயானால் அப்போது சில மாற்றங்கள் ஏற்படக்கூடும்.

திரு. ஜி. சுவாமிநாதன்: ஆயிரம் ரூபாய் வரை ஊதியம் பெறுகிறவர்களில் தேக்க நிலையில் உள்ளவர்களுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை ஊதிய உயர்வு கொடுக்கிறார்கள். எப்பொழுது அது நிர்ணயம் செய்யப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன். மேலும் விலைவாசி சென்ற ஆண்டிலே 25 சதவிகிதம் உயர்ந்திருக்கிற போது, குறைந்தது 1,500 ரூபாய் வரை ஊதியம் உள்ளவர்களுக்கும் இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை 50 ரூபாய் தேக்க ஊதியத்தைக் கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(பிற்பகல் 4–10)

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: பொதுவாக எந்த ஒரு பிரச்சினையாக இருந்தாலும், அதிலே விலைவாசி ஏற்றத்தைப்பற்றிக் குறிப்பிடுவதென்பது கேள்வி நேரத்தில் மரபாகிவிடுமோவென்று அஞ்சுகிறேன். இப்போது, விலைவாசி குறைந்திருக்கிறது. கேள்வி கேட்கின்றபோது, அது நியாயமாக இருக்கலாமே தவிர, விடை சொல்லும்போது அது பொருத்தமாக இல்லை.

Water Supply Scheme for the Udayarpalayam Town Panchayat.

* 15 *Q.*—THIRU L. BALARAMAN (on behalf of THIRU Y. VENKATESWARA DIKSHIDAR) : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether any action has been taken to implement the Water Supply Scheme for the Udayarpalayam Town Panchayat in Tiruchirappalli District ; and

(*b*) if so, the name of the scheme under which such action has been proposed to be taken ?

உடையார்பாளையம் பேரூராட்சி குடிநீர் திட்டம்.

திரு. எல். பலராமன், (திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் சார்பில்): மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் —

(அ) திருச்சி மாவட்டத்தில் உள்ள உடையார்பாளையம் பேரூராட்சி குடிநீர் திட்டம் செயல்பட நடவடிக்கை எடுக்கப்பட்டதா?

(இ) ஆமெனில் எந்தத் திட்டத்தின்கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) & (இ) ஜெயங்கொண்டம் பேரூராட்சி குடிநீர் திட்டத்திற்கான குழாய் வழிப்பாதையில் துணைக்குழாய்

போடுவது மூலமாக உடையார்பாளையம் பேரூராட்சிக்குத் தண்ணீர் கொண்டு வருவதற்கான வரைவுத் திட்டம் ஒன்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு வரப்பெற்றுள்ளது. பெரும்பாலும் இந்த அளவிலே ஏற்கப்பட்டிருக்குமெனறு எதிர்பார்க்கிறேன்.

Opening of Civil Supplies Model Shop in Mayuram

* 16 *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether it is a fact that representation has been received by the Government during the month of May, 1975, from the public of Mayuram requesting them to open a Civil Supplies Model Shop there, for effective distribution of essential commodities to the public ; and

(*b*) if so, the action taken thereon ?

மாயூரத்தில் பொருள் வழங்கு துறையின் மாதிரி விற்பனை நிலையம் திறத்தல்.

திரு ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) பொதுமக்களுக்கு இன்றியமையாப் பொருட்களைத் திறம்படப் பகிர்ந்தளிப்பதற்காக உணவுப் பொருள் வழங்கு துறையின் மாதிரி விற்பனை நிலையம் ஒன்றினைத் திறக்க வேண்டுமென்று வேண்டி 1975–ஆம் ஆண்டு மே திங்களில் மாயூரம் பொதுமக்களிடமிருந்து முறையீடு ஏதும் அரசுக்கு வந்தது உண்மையா?

(இ) ஆமெனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

The Hon. Thiru S. MADHAVAN : (*a*) Yes.

(*b*) The family vards in ward No. 7, Mayuram town, were detached from Mayuram Co-operative- Wholesale Store Branch on 7th June 1975 and attached to the existing model shop at Thiruvilandur.

THIRU G. SWAMINATHAN : May I know the reason why such a request was made by the public of Mayuram to open a Civil Supplies Model Shop, while there is a wholesale co-operative store ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இந்தக் கூட்டுறவு நிறுவனத்திலிருந்து சரியாக எங்களுக்குப் பொருள்கள் கிடைக்க வில்லை என்றும், சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனுடன் அதை இணைக்க வேண்டுமென்றும் அவர்கள் கேட்டிருந்தார்கள். எனவே இந்த முடிவு எடுக்கப்பட்டது.